

முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட திலீப் குமார் ராஜகண்ணப்பன் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நாடாளுமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவர் அணி தலைவருமான டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சட்டமன்ற உறுப்பினரும், மருத்துவர் அணி மாநில செயலாளருமான டாக்டர் எழிலன் ஆகியோர் உள்ளனர்.

## இயற்கையின் எதிர்வினை; வயநாடு நிலச்சரிவு!

திருவனந்தபுரம், ஆக. 27-

கேரளாவில் இயற்கை வளங்கள் சுரண்டப்படுவதால் இத்தகைய பேரிடர்கள் ஏற்படுகின்றன என்றும் பேரிடர்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் கேரள அரசு கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்றும் கோரி கேரள உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் அம்மனுவை விசாரித்த நீதிபதிகள் ஏ.கே. ஜெயசங்கரன் நம்பியார், வி.எம். சியாம்குமார் அடங்கிய அமர்வு கூறுகையில், "மனிதனின் அக்கறையின்மை மற்றும் பேராசைக்கு இயற்கையின் எதிர்வினைதான் வயநாடு நிலச்சரிவு. இயற்கை நீண்ட காலத்துக்கு முன்பே நமக்கு எச்சரிக்கை விடுத்தது. கேரள அரசு அதன் வளர்ச்சிக் கொள்கையை மறுபார்வை செய்ய வேண்டும்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை, முகாம் அலுவலகத்தில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# பழனி 'அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு'

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி!

துறை தன் பணிகளை அறத்துடன் எடுத்துச் செல்கிறது என்றால், அதற்கு காரணம் அண்ணன் சேகர் பாபு அவர்கள்தான்.

### நாத்திகத் தோட்டத்தில் ஆத்திக மலர்

நாத்திகத் தோட்டத்தில் பூத்த ஆத்திக மலராக அண்ணன் சேகர் பாபு அவர்கள் செயல் பாபுவாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறார். நம் திராவிட முன்னேற்றக் கழக அரசு, திடீரென இந்த மாநாட்டை நடத்துகிறது என்று இன்றைக்கு ஒரு சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். இந்த மாநாடு திடீரென்று நடத்தப்படுகின்ற மாநாடு அல்ல. கடந்த மூன்று ஆண்டுகளில் நம் முதலமைச்சர் தலைமையிலான நம் திராவிட மாடல் அரசு இந்து சமய அறநிலையத் துறை சார்பில், ஏராளமான சாதனைகளை எல்லாம் செய்து விட்டுத்தான் இந்த மாநாட்டை நடத்துகிறது.

### குறுக்கே நிற்காத அரசு

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரை யாருடைய நம்பிக்கைக்கும் குறுக்கே நிற்காத அரசு. எல்லோரின் உணர்வுக்கும் மதிப்பு கொடுக்கின்ற அரசு. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், அறநிலையத்துறையின் பொற்காலம் என்றால் அது நம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிதான்.

திராவிட இயக்கத்தின் தொடக்கப் புள்ளியாக இருந்த நீதி கட்சியின் ஆட்சியின்போதுதான் `இந்து சமய அறநிலையத்துறை பாதுகாப்புச் சட்டம்' உருவாக்கப்பட்டு, வழிபாட்டு உரிமை உறுதி செய்யப்பட்டது. குன்றக்குடி அடிகளார் தந்த விபூதியை நெற்றி நிறைய பூசி கொண்டவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் `ஒன்றே குலம் ஒருவனே தேவன்' இன்று முழங்கினார்கள். ஓடாத திருவாரூர் தேரை ஓட வைத்தவர்தான் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இப்படி நம் தலைவர்கள் வழியில் முதலமைச்சர் அவர்கள் அறநிலையத்துறை சார்பாக, ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். திராவிட மாடல் அரசு அமைந்த இந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1,400 க்கும் அதிகமான கோவில்களுக்கு குடமுழுக்கு செய்து வைத்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

### கோவில்கள் திருப்பணிகள்

5 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரம் ஏக்கர் கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் 8 ஆயிரத்து 500 கோவில்கள் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஒரு லட்சம் பக்தர்களுக்கு கோவில்களில் உணவு வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் நம் முதலமைச்சர் அவர்கள் காலை சிற்றுண்டித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இன்றைக்கு நாட்டிற்கு முன்மாதிரியாக பழனி முருகன் கோவில் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரியில் பயிலும் நான்காயிரம் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் விரைவில், மதிய உணவும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ``திராவிடம் என்பது எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான். திராவிடம் யாரையும் ஒதுக்காது. எல்லோரையும் இணைக்கும்" என்பதற்கு உதாரணம்தான் அனைத்து சாதியினரையும் மகளிரையும் அர்ச்சகர் ஆக்கியவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

### அன்னைத் தமிழில் அர்ச்சனை

அன்னைத் தமிழில் அர்ச்சனை என்ற திட்டம் அனைத்துக் கோவில்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மற்ற துறைகளைப் போலவே இந்து சமய அறநிலையத்துறையும் இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டி வருகிறது. இப்படி அடுக்கடுக்கான சாதனைகளை எல்லாம் செய்துவிட்டுத்தான் இந்த சிறப்புக்குரிய மாநாட்டினை நம் தமிழக அரசு நடத்துகிறது.

### தமிழர் பண்பாட்டு மாநாடு

இந்த மாநாடு ஆன்மீக மாநாடாக மட்டுமல்லாமல், தமிழர் பண்பாட்டு மாநாடாகவும் நடைபெறுகிறது. கழக அரசின் இந்த முயற்சிகளை எல்லாம் ஆன்மீகப் பெரியவர்கள், பக்தர்கள் நீங்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் அமைச்சராகவும் இந்த மாநாட்டில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆன்மீகத்தை எல்லோருக்கும் உடைய தாக்கும் வகையில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு வரலாற்றில் என்றென்றைக்கும் நிலைத்திருக்க போவது உறுதி. இந்த மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு எனது வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அனைத்து உலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் அமைச்சர்கள் அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார், மயிலம் பேரூர் சிறுவை ஆதினம் மடாதிபதிகள், அரசின் முதன்மைச் செயலாளர் சந்தர மோகன் ஐ.ஏ.எஸ். துறையின் ஆணையர் பி.என்.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ் மாவட்ட ஆட்சித் தலைவர் பூங்கொடி ஐ.ஏ.எஸ், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், ஆன்மீகச் சான்றோர்கள், அருளாளர்கள், சொற்பொழிவாளர்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஜெகத்ரட்சகன் இல்லத் திருமண விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களும், திருமதி விசாலாட்சி பொன்முடி அவர்களும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர்சிவா மாவட்டஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் செயற்குழு உறுப்பினர் திருவக்கரை கோ.பாஸ்கரன் வானூர் ஒன்றிய பெருந்தலைவர் உஷாமுரளி கண்டமங்கலம் ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன் கோட்டகுப்பம் நகராட்சி சேர்மன் எஸ். ஜெயமூர்த்தி ஒன்றிய செயலாளர்கள் பி.கே.டி.முரளி , கே.எஸ்.ராஜி மைதிலி ராஜேந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் - நத்தம் - ஆவிச்சிப்பட்டி கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டு வந்த

# தனியார் பட்டாசு ஆலையில் வெடி விபத்து!

## உயிரிழந்தவர்கள் குடும்பங்களுக்கு – முதல்வர் ஆறுதல் – நிதியுதவி!

சென்னை, ஆக.27-

**திண்டுக்கல் மாவட்டம், நத்தம், ஆவிச்சிப்பட்டி கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டு வந்த தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்கள், நேற்று இதுகுறித்து விடுத்த அறிக்கை வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், ஆவிச்சிப்பட்டி கிராமத்தில் அனுமதியின்றி செயல்பட்டுவந்த பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (24.08.2024) பிற்பகல் சுமார் 03.30 மணியளவில் வெடிமருந்து தயாரிக்கும் பணியின்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, திருத்தங்கல், முத்துமாரியம்மன் காலனியைச் சேர்ந்த திரு.கண்ணன் (எ) சின்னன் (வயது 42) த/பெ. குருசாமி மற்றும் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, விஸ்வநத்தம் பகுதியைச் சேர்ந்த திரு. முனீஸ்வரன் (எ) மாசா (வயது 30) த/பெ.மாரிமுத்து ஆகிய இருவரும் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.மீரான் தலைமையில்

# துபாயில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி பங்கேற்பு!

*துபாய், ஆக.27-*

*ஐக்கிய அரபு அமீரகம் துபாயில் , முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா அமீரக தி.மு.க. பொறுப்பாளரும், தமிழ்நாடு அரசு அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான எஸ். எஸ். மீரான் ஏற்பாட்டில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது*

*விழாவிற்கு தாயகத்திலிருந்து, தி.மு.க. மாணவரணி தலைவர். வழக்கறிஞர்.இரா. ராஜீவ் காந்தி, எழுத்தாளர், தி.மு.க. ரைடர்ஸ் ஒருங்கிணைப்பாளர் அ.ராசா தமிழ் மாறன், அயலக தமிழர்கள் நல வாரிய உறுப்பினரும் சிங்கப்பூர் தொழிலதிபருமான வெங்கட் ரமணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.*

*நிகழ்ச்சியில் முதலாவதாக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு அனைவரும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.*

*இவ்விழாவில் சிறப்புரையாற்றிய மாணவர் அணித் தலைவர் இராஜீவ் காந்தி அவர்கள் ; உலகிலேய ஒருவன் என்னைப் பார்த்து , நீ இந்த சாதி என்று என் சாதியைச் சொல்லி நீ இழி பிறவி என்றால், கோடி கோடியாக கொட்டிக் கொடுத்தாலும் என்னால் அவனை வெல்லவே முடியாது.*

*இந்த நேரத்தில்தான் சமூகநீதி எனும் ஆயுதத்தை தந்தை பெரியார் கொண்டு வந்தார். அதைப் பேரறிஞர் அண்ணா இறுகப் பற்றிக் கொண்டார். இருவரும் பேசிச் சென்றார்கள். ஆனால், தந்தை பெரியார் கண்ட கனவை, பேரறிஞர் அண்ணா கண்ட கனவை, தன் வாழ்நாள் முழுக்க சமூகநீதி தளத்தில் நின்று செய்து செய்து யாரைப் பார்த்து தாழ்ந்தவன் என சொன்னாய் இதோ பார் நிமிர்ந்து நிற்கிறேன் என நம் தோள்கள் சொல்கிறதென்றால் அந்தப் பெருமை யெல்லாம் முத்தமிழறிஞர் கலைஞரையே சாரும்.*

*ஒரு அரசியல்வாதி தன் மொழிக்காய் தன் வாழ் முழுக்க முழங்கினான் என்றால் , உலகத்திலேயே கலைஞரைத் தவிர, வேறு யாருமே இருக்க முடியாது. 'தமிழ் வெல்லும் 'என சொன்ன அந்தக் கலைஞருக்குத்தான் நாம் இன்று நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம் என்று , கலைஞரை நினைவு கூர்ந்தார்.*

*கலைஞர் இல்லை. இனி, தி.மு.க. இல்லை என்றவர்கள். இன்று, கலைஞர் இட்ட அந்த பாதையில், அடிபிசகாமல் அதே ஆற்றலுடன் நம் தளபதி ஆட்சி நடத்துவதைக் கண்டு எதிர்க்கட்சியினரே வியந்து பார்க்கின்றனர். கலைஞரின் குறும்பு , கிண்டல் , திறமையாவும் ஒருங்கே பெற்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டைக் கண்டவர்கள் இன்று சொல்கிறார்கள், தி.மு.க.வை இன்னும் 50 வருடத்திற்கு யாரும் அசைத்துக் கூட பார்க்க முடியாது என்கின்றனர். இவையாவும், நம் முத்தமிழறிஞர் கலைஞர் இட்ட அந்த விதைதான் என்று, புகழாரம் சூட்டினர்.*

*எழுத்தாளர். அ.ராசா தமிழ் மாறன் பேசும் போது , சினிமாவைப் போல் கொஞ்சம் பின்னோக்கி நினைத்துப் பாருங்களேன். ஒருவேளை கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால், நம் மீது இந்தி கட்டாயமாக திணிக்கப்பட்டிருக்கும். நம் தாய்த் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருக்கும். நாம் நம் இன அடையாளத்தைத் தொலைத்திருப்போம் முகவரி தொலைந்தவர்களாய் வாழ்ந்து கொண்டிருப்போம். அதை மீட்டெடுத்து கொடுத்த கலைஞருக்கு இன்று நாம் நன்றி கூறுகிறோம், என்றார்.*

*எழுத்தாளரும், கவிஞருமான சசிகுமார் அவர்கள் பேசும் போது, கலைஞரின் சொல்லாடல் பற்றியும் கலைஞர் தன் வெற்றி, தோல்வி யாவற்றிலும் கலங்காது நின்று மக்கள் பணியாற்றினார் என்றும், இன்று, கலைஞருக்கு நினைவு நாள் என்கின்றனர். தலைவா ! உன்னை மறந்தால் அல்லவா நினைக்க ... நீ எப்போதும் எங்களுடனே இருக்கின்றாயே ... என்று, தன் கவிதை வரிகளால் கலைஞருக்கு புகழாரம் சூட்டினார்.*

*மர்யம் கபீர் பேசும் போது; கலைஞரிடம் எனக்கு மிகவும் பிடித்த குணம் போராடும் அந்தக் குணம். ஆரிய மாயையை வீழ்த்த வந்த கலைஞர் என்றும் சாகா வரம் பெற்றவர் என்று, தன் அழகு தமிழ் சொல்லாடலால் கலைஞரை புகழுரைத்தார்.*

*எழுத்தாளர் ஜெஸிலா பானு பேசும் போது : தலைவர் கலைஞரைப் பற்றி சொல்வதாக இருந்தால், இன்னும் இன்னும் நிரம்ப சொல்லலாம் என்றாலும், எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் அன்றே கலைஞர் அவர்கள் பெண்களுக்கு சொத்துரிமையில் சம பங்கு உண்டு என்று, சட்டம் கொண்டு வந்தார். அந்த ஒன்றுக்காகவே கலைஞரை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும் என்றார்.*

*டயானா பேசும் போது , 13 வயதில் நான் எப்படி இருந்தேன் என்றே எனக்குத் தெரியாது. ஆனால், நம் கலைஞர் அவர்களோ தன் 13 ஆம் வயதிலேயே மக்களுக்காய் களம் கண்டுள்ளார். அவர் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்தேன் என்பதே எனக்குப் பெருமை என்றார்.*

*ரெங்கராஜன் பேசும்போது முத்தமிழ் அறிஞரின் மேடைப் பேச்சில் எப்போதும் இருக்கும் நகைச்சுவை உணர்வை பற்றி (சர்காசத்தை) இரண்டு மேடை சம்பவங்களை குறிப்பிட்டு பேசியிருந்தார், கன்னிமாரா நூலகத்தின் நூற்றாண்டு விழாவில் பேசும்போது பொன்னாடைகளுக்கு பதிலாக சிறந்த நூல்களை கொடுத்திருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன் சொல்லும்போதுமேடையில் இருந்த நல்லி குப்புசாமி அவர்கள் சொல்லக்கூடும் பொன்னாடைகளும் நூலினால் செய்யப்பட்டது தானே என்று மேடையில் இருந்த அவரையும், ஹைக்கூ கவிதைகளைப் பற்றிய விழாவில் எத்தனை பேருக்கு இதில் ஹைக்கூ என்றால் என்னவென்றே தெரியாது என்பது எனக்கு தெரியும் அந்த விஷயம் எனக்கு தெரியும் என்பதும் அவர்களுக்கு தெரியும் ஆனால் அனைத்தும் தெரிந்தது போல் தலையை ஆட்டி மிகவும் அழகாக ரசித்துக் கொண்டிருந்ததையும் நான் கவனித்தேன் என்று பார்வையாளர்களையும் மெல்ல கிண்டல் அடிக்கும் நகைச் சுவை உணர்வு கொண்டவர் என்றார்.*

*விழாவைத் தொகுத்து வழங்கிய ஆசிப் மீரான் பேசுகையில், "கலைஞரின் நூற்றாண்டு விழாவில் கலைஞரைக் குறித்துச் சொல்ல நூறு விஷயங்கள் உண்டெனினும் அவரது நகைச்சுவையுணர்வு, நாவன்மை, அரசியல் சாணக்கியத்தனம், தமிழ்ப்பற்று, தமிழ் மீதான படைப்பாளுமை, நொடியில் எதிராளியின் கேள்விகளுக்கு அவர்களே வியக்கும் மறுமொழி தரும் திறமை, நிர்வாகத் திறன், கட்சிக்காரர்களோடு இணக்கம், அரசியலில் நாகரிகம், பெரியாரிடம் கற்றுத் தேர்ந்த சமூகநீதி, அண்ணாவின் வழியில் சிறுபான்மை சமூகத்திடம் காட்டும் பரிவு, தோல்வியிலும் கலங்காத நெஞ்சுரம், இறுதி மூச்சு வரை கடைப்பிடித்த போர்க்குணம் போன்ற ஆளுமை குணங்களாலேயே இன்றளவும் தமிழக மக்கள் மனதில் அரியணையிட்டு அமர்ந்திருக்கிறார்" என்று குறிப்பிட்டார்*

*நிகழ்ச்சியில் மீரான் மைதீன், ஷா, பத்திரிகை நிருபர் முதுவை ஹிதாயத் பிளாக் துளிப் செந்தில், அபுதாபி ஜாகிர், ரெங்கராஜன்,இன்ஜினியர் பாலா, இர்ஷாத், செந்தில் பிரபு, பி.ஆர்.ஓ.கபீர், பொதக்குடி தாரிக், சேக் தாவுது, பன்னீர்செல்வம், உதயநிதி பாலா, சுலைமான் , மணிவேல், இஸ்மாயில், பாலா, பருத்தி க்பால், மச்சேந்திரநாதன், வீ.பாண்டியன், அமீன், பாரூக், ரமேஷ், கமல், ஜின்னா, சாகுல் ஹமீது, அப்துல் காதர் உட்பட அமீரக தி.மு.க.வை சார்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.*



துபாயில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் கழக மாணவர் அணித் தலைவர் இராஜீவ் காந்தி பங்கேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.மீரான் தலைமை வகித்தார். இதில் அமீரக தி.மு.க.வினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.